DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No. 180/2021**

Prosecution **PW.4**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | திரு.ராஜசேகர் | கிராமம் : | |
| தந்தை பெயர் : | அன்னாவி | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 56 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 30.07.2026

1, 2 எதிரிகள் ஆஜர் . 3 ம் எதிரிக்கு வழக்கு தனியாக பிரிக்கப்பட்டு CC189/2021 வழக்காக பிரிக்கப்பட்டு உள்ளது. வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் திருச்சி சரக Q பிரிவு குற்றப்புலனாய்வு துறையில் காவல் துணைக்கண்காணிப்பாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 02.10.2017 ம் தேதி மாயனூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது உதவி ஆய்வாளர் முகமது ஜாபர், சி.உ.ஆ. கதிரேசன், பரமேஸ்வரன் , மு.நி.கா. 1086 ஆகியோர்கள் சேர்ந்து வீரராக்கியம், ரெங்கநாதபுரம், மேலமாயனூர், நத்தமேடு ஆகிய இடங்களில் ரோந்து செய்து கொண்டிருந்த போது நத்தமேடு துவக்கப்பள்ளி அருகே காவிரி ஆற்றில் மணலை திருடி விற்பனைக்காக லாரியில் ஏற்றி கொண்டிப்பதாக கிடைத்த தகவலின் பேரில் அதிகாலை 03.30 மணியளவில் நத்தமேடு துவக்கப்பள்ளி அருகே சென்று பார்த்தோம்.

2. TN 41 C 8686 என்ற எண்ணுள்ள லாரியில் மணல் ஏற்றிக் கொண்டிருந்தவர்களை சுற்றி வளைத்து பிடிக்க முயற்சித்த போது இரண்டு நபர்கள் தப்பிச் சென்றுவிட்டார்கள். மற்றொருவரை பிடித்து விசாரித்தபோது தனது பெயர் முருகன் என்றும் மேலும் அவரை விசாரிக்க அவர் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை தனிநபர் சாட்சிகள் யாரும்

இல்லலாததவ்ல போலிஸ் சாட்சிகள் பரமேஸ்வரன், முகமது ஜாபர் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்தேன்.

3. பின்னர் அந்த ஒப்புதல் வாக்குமூலதில் முருகவேல், நல்லுசாமி மற்றும் ரஞ்சித் ஆகியோர்களடன் காவிரி ஆற்றிலிருந்து மாட்டுவண்டியில் மணலை திருடி சேமித்து தனது வண்டியில் ஏற்றியதாக ஒத்துக்கொண்டார் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். பின்னர் எதிரி எடுத்த ஆஜர் செய்த TN 41 C 8686 என்ற 1 1/2 யூனிட் மணலுடன் கூடிய லாரியை கைப்பற்றுதல் மகஜரில் சாட்சிகள் பரமேஸ்வரன் முகமது ஜாபர் முன்னிலையில் கைப்பற்றினேன். **கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. பின்னர் எதிரியுடனும் வழக்கு சொத்துடன் நிலையம் வந்து காலை 07.00 மணிக்கு மாயனூர் காவல் நிலையக்குற்ற எண்.327/2017 இதச பிரிவுகள் 379 இதச மற்றும் 21(1) MMDR Act ன்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

5. பின்னிட்டு அன்றைய தேதியிலேயே காலை 08.30 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் ஹேமந்த், தினேஷ் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **பார்வை மகஜர் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சாட்சிகள் முகமது ஜாபர், பரமேஷ்வரன் , கதிரேசன், ஆறுமுகம், ஹேமந்த், தினேஷ் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

6. எதிரிகள் ரஞ்சித், நல்லுசாமி கரூர் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணையம் பெற்றிருந்ததால் அவரை கைது செய்யவில்லை. பின்னர் இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட 1 1/2 யூனிட் மணலை பொதுப் பணித்துறை நீர் ஆதாரத்துறை, கனிமம் மற்றும்கண்காணிப்பு பிரிவு–2 இளநிலை பொறியாளர் அவர்களிடம் வேண்டுகோல் கடிதம் கொடுத்து பொறியளார் சதீஷ்குமார் என்பவரிடம் மணலை ஒப்படைத்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மணலை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகைசீட்டு பெற்றேன் **ஒப்புகைக்சீட்டு அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

7. இவ்வழக்கின் சட்டப்பிரிவை இதச பிரிவுகள் 379 இதச மற்றும் 21(1) MMDR Act இதிலிருந்து இதச பிரிவுகள் 379 சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை

தயார் செய்தேன் **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் வழக்கில் கைப்பற்றப்பட்ட லாரியை படிவம்–95 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **படிவம்–95 அ.சா.ஆ. 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. TN 41 C 8686 என்ற வண்டியின் புகைப்படம் அ.சா.ஆ. 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என் புலன் விசாரணை முடித்து இதச பிரிவுகள் 379 ன்படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>1, 2 **எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**</u>

1. மணல் ரோந்து பணிக்கு சென்ற போது கிடைத்த ரகசிய தகவல் எந்த மார்க்கமாக கிடைத்தது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ரோந்து பணிக்கு நான் உட்பட் எத்தனை காவல் அதிகாரிகள் எத்தனை வாகனத்தில் சென்றோம் என்றால் 1 இருசக்கர வாகனம், 1 ஜீப்பில் 6 பேர் சென்றோம். என்னுடன் ரோந்து பணிக்கு வந்த காவலர்களுக்கும் இந்த விவரம் தெரியும் என்றால் சரிதான்.

2. ரோந்து பணிக்கு காவலர்களுக்கு கடவூச்சீட்டு கொடுத்தேனா என்றால் தனியாக சென்றால் கடவூச்சீட்டு கொடுப்போம் என்னுடன் வருபவர்களுக்கு கொடுக்கமாட்டோம். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் முருகன் வீடு, இளங்கோ வீடு, ஆண்டியப்பன் வீடு இருந்ததாக குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் எந்த தளவாடப்பொருட்களையும் மண்வெட்டி, காரச்சட்டி, சாக்குமூட்டை எதையும் நான் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். நாங்கள் 6 காவலர்கள், 3 எதிரிகளை பிடித்த போது தள்ளுமுள்ளு ஏற்பட்டு சத்தம் எழுப்பியோ வாய்ப்புள்ளதா என்றால் இல்லை.

3. 9 பேர்கள் கூடியிருக்கும் சத்தம் கேட்கும் வாய்ப்புள்ளது என்றால் சரியல்ல. அப்படி ஒரு சம்பவம் அங்கு நடைபெறவில்லைஅதனால் நான் விவரித்து சொல்லமுடியவில்லைஎன்றால் சரியல்ல. மாதிரி வரைபடத்தில் உள்ள வீடுகளில் உள்ளவர்களை தனிப்பட்ட சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் விசாரித்தேன் சாட்சியாக யாரும் முன்வராததால் வழக்கில் சாட்சியாக சேர்க்கப்படவில்லை. எந்தெந்த நபர்களை சாட்சியாக விசாரிக்க முற்பட்டேன் என்று அவர்கள் மறுத்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

4. சம்பவம் நடந்த பகுதியில்எந்தெந்த நதிகள் உள்ளது என்றால் காவிரி, அமராவதி ஆறுகள் உள்ளது. நான் சம்பவம் நடந்த பகுதியில் காவிரி ஆறு கிடையாது அமராவதி தான் உள்ளது என்றால் சரியல்ல. என்னுடைய புலன் விசாரணையில் என்னுடைய காவல் நிலைய அதிகாரி அம்பிகாவை விசாரித்து அறிக்கை தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. அம்பிகா என்பவர் சம்பவ இடத்திற்கு வந்ததாக சாட்சியம் அளித்திருந்தால் அது முரண்பட்ட கருத்து என்றால் சரியல்ல சம்பவ நடந்த பிறகு எனது வாகனத்தில் இருந்து மேற்படி த.கா.அம்பிகா நாங்கள் விசாரணை செய்த எதிரிக்கு எனதுமடிக்கணிணியில் நான் சொல்ல அவர் பதிவு செய்தார்.

5. என்னுடைய புலன் விசாரணையில் மேற்சொன்ன விவரத்தை இறுதி அறிக்கையில் விவரித்து சொல்லவில்லை என்றால் சரிதான். அப்படி ஒரு சம்பவம் நடைபெறவில்லை அதனால் நீதிமன்றத்திற்கு சொல்லவில்லை என்றால் சரியல்ல. முருகேவேல் என்பவரிடம் பெற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் தனிப்பட்ட சாட்சிகளான தனிப்பட்ட நபர்கள், VAO வின் முன்னிலையில் வாங்கவில்லை என்றால் சரிதான் ஆனால் அதிகாலை நேரத்தில் தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாத காரத்தினால் போலிஸ் சாட்சிகளை வைத்து ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது.

6. அதிகாலை நேரத்தில் கிராம மக்கள் இருப்பரார்கள் சட்டத்திற்கு புறம்பாக நான் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் சம்பவ இடத்தில் இல்லை நான் சொல்வது போல் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. என்னுடைய வருடாந்ததிர புள்ளி விவரக் கணக்கிற்காக போடப்பட்ட பொய் வழக்கு என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/–திரு.ஆர்.பாக்கியராஜ்
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.